# தீயில் வெந்த தமிழ்ப் புலிகள்

விடுதலை

இந்தி எதிர்ப்புத் தியாகிகள் வரலாறு

தீயில் வெந்த

# தமிழ்ப் புலிகள்

விடுதலை

இந்தி எதிர்ப்புத் தியாகிகள் வரலாறு

நன்கொடை ரூ.3/-

பேசி: 262294
பகுத்தறிவுப் பாசறை,
குயில் பண்ணை,
525-A-1, உடையார் குடியிருப்பு,
திரு. வி. க. சாலை, சேலம்-636 003.


வெளியீடு:

குயில் பண்ணை,
203, அம்மாப்பேட்டை நெடுஞ்சாலை,
சேலம் - 1.



நுனிநர்க்கு ஆங்கிலத்திலும், வடநாட்டுக் கலாச்சார மோகத்திலும் மூழ்கிக் கொண்டிருக்கும் இன்றைய தமிழ் இளைஞர்களுக்கு, இந்த மண்ணில் தாய் மொழிக்காக இரத்தத்தால் எழுதப்பட்ட ஒரு வரலாற்றை அறிமுகப்படுத்தும் முயற்சிதான் இச்சிறிய நூலாகும்.

விடுதலை



- சிதைந்துபோன
  இவனைத் தெரிகிறதா?

- பதவி அலைகளால் தியாகக் கரையில்
  ஒதுக்கப்பட்டவன்

- ராசேந்திரா
  உன்னைத் தேடினோம்
  எங்களைக் கண்டுகொள்ள

— அருள்மொழி

# தீயில் வெந்த தமிழ்ப் புலிகள்

சனவரி 25.

இந்தி எதிர்ப்புத் தியாகிகள் நினைவுநாள்.

தமிழர்களின் வீர வணக்க நாள்.

காங்கிரஸ் பேரியக்கத்தின் வேரைச் சுட்டுப் பொசுக்கிய மொழிப்போர் நெருப்பை - அந்த நெருப்புக்குத் தன்னையே விறகாக்கிக் கொண்ட மெழுகுவர்த்திகளை அவர்களின் தியாகத்தை நினைவுபடுத்திக் கொள்ளும் நாள்.

தாளமுத்து, நடராசன், கீழப்பளுவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன், கோடம்பாக்கம் சிவலிங்கம், கீரனூர் முத்து, சத்தியமங்கலம் முத்து, ஆசிரியர் வீரப்பன், பீளமேடு தண்டபாணி, விராலிமலை சண்முகம், சிவகங்கை இராசேந்திரன், மாயவரம் சாரங்கபாணி.

யார் இவர்கள்?

எந்தக் கோட்டையில் கொடி ஏற்றியவர்கள்?

எந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்து முடிசூட்டிக் கொண்டவர்கள்?

எந்த வரலாற்றுப் புத்தகத்தில் இவர்கள் பெயர் எழுதப்பட்டுள்ளது?

இல்லை. எதுவுமே இல்லை.

இவர்கள்...

திராவிட இயக்க அரசியல் வெற்றியின்கீழ் புதைந்துபோன கல்லறைகள்.

திராவிட இயக்கக் கொடிமரத்தின் வேர்கள்.

சில கட்டங்களின் பெயர்களாகவும், தேர்தல் நேரத்துப் பிரச்சாரக் கருவியாகவும் நிலைத்துவிட்டவர்கள்.

இதைத்தவிர, இந்தத் தலைமுறைக்கு என்ன தெரியும் இந்த

மெழுகுவர்த்திகளைப் பற்றி?

''அழிந்துபோன என் கிரேக்க சாம்ராஜ்யத்தின் கல்லறையில் இருந்து புறப்படுகிறேன்'' என்றான் அலெக்சாண்டர்.

அப்படித்தான் தமிழர்களின் இந்தி எதிர்ப்புப்போராட்ட வரலாறு இந்தத் தியாகிகளின் கல்லறையிலிருந்து தொடங்கியது.

நுனிநாக்கு ஆங்கிலத்திலும், வடநாட்டுக் கலாச்சார மோகத்திலும் மூழ்கிக் கொண்டிருக்கும் இன்றைய தமிழ் இளைஞர்களுக்கு, இந்த மண்ணில் தாய் மொழிக்காக இரத்தத்தால் எழுதப்பட்ட ஒரு வரலாற்றை அறிமுகப்படுத்தும் முயற்சிதான் இச்சிறிய நூலாகும்.

## தாளமுத்து - நடராசன்

தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க டெல்லி அரசு முயற்சிப்பதும், தமிழர்களின் எதிர்ப்பைக் கண்டு சிறிது காலத்திற்குப் பதுங்கிக் கொள்வதும் 1960-க்குப் பின் தொடங்கிய நிகழ்ச்சியல்ல. இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பே இந்த சதிக்கு வித்திட்டவர் 'குல்லுகபட்டர்' என்று அண்ணாவால் அழைக்கப்பட்ட ராசகோபாலாச்சாரியார். அதுவரை இந்தித் திணிப்பு பற்றி தந்தை பெரியார் பேசியும், எழுதியும், தமிழர் நெஞ்சில் ஏற்றி வைத்திருந்த மொழிப்பற்று, ராசகோபாலாச்சாரியாரின் இந்தித் திணிப்பு ஆணையால் காற்றுக்குக் காத்திருந்த கந்தகமாய் பற்றியெரிந்தது.

1938-ல் தந்தை பெரியார் முதல் இந்தி எதிர்ப்புப் போரை தொடங்கி வைத்தார். திருச்சியிலிருந்து தொடங்கிய இந்தி எதிர்ப்புப் படைக்கு சர்வாதிகாரியாக இருந்து அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி படை நடத்திச் சென்றார்.

21.4.38 அன்று இந்தியைத் திணிக்கும் அரசாணையை ராசகோபாலாச்சாரி கொண்டு வந்தார். தந்தை பெரியார் கைது செய்யப்பட்டார். அவருக்கு கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.

1939-இல் உயர்நிலைப் பள்ளிகளுக்கு முன்பாக நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மறியலில் பலர் கைது செய்யப்பட்டனர். அந்தப் போராட்டத்தில் பங்கேற்ற இளைஞர்கள்தான் நடராசனும், தாளமுத்துவும். மொழி எனும் தீப்பந்தத்தை தங்கள் கைகளில் ஏந்திச்சென்ற அந்தப் போராளிகள் அணைந்துபோன மெழுகுவர்த்திகளாய் வெளியே வந்தார்கள். அந்த

மாவீரர்களின் மறைவிற்காக நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

தாளமுத்து - நடராசன் இருவரது பெயரும் மொழிப் போர் வரலாற்றில் சேர்த்தே நினைக்கப்படுகிறது.

1989-ல் மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு சென்னையில் எழுப்பப்பட்ட மிகப்பெரிய அரசு கட்டிடத்திற்கு அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களால் தாளமுத்து நடராசன் பெயர் சூட்டப்பட்டது.

1939-ல் சிறைச்சாலையில் இறந்துபோன தாளமுத்துவும், நடராசனும்தான் இந்தி எதிர்ப்புப் போரில் முதல் களப்பலிகள்.

# கீழப்பளுவூர் சின்னச்சாமி

1963 - டிசம்பர் மாதம்.

எழும்பூர் ரயில் நிலையம்.

காவல் துறை புடைசூழ வருகிறார் முதல்வர் பக்தவச்சலம். கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்த ஒரு இளைஞன் பக்தவச்சலத்தின் காலில் விழுந்து கதறினான்.

''அய்யா, தமிழைக் காப்பாற்றுங்கள். இந்தியை நுழைய விடாதீர்கள். நீங்களும் தமிழர்தானே.''

பக்தவச்சலம் காவல்துறைக்கு உத்தரவு போட்டார்.

''இந்தப் பைத்தியத்தைக் கைது செய்யுங்கள்.''

ஒரு மாத காலத்துக்குப்பின்,

25.1.64 ஆம் நாள் அந்த இளைஞன், திருச்சி ரயில் நிலையத்தின் வாசலில் விடியற்காலை 4.30 மணிக்குப் பெட்ரோல் ஊற்றித் தீ வைத்துக் கொண்டு 'தமிழ் வாழ்க' - 'இந்தி ஒழிக' என்று கத்தியவாறு கருகிப் போனான்.

பக்தவச்சலத்தால் பைத்தியம் என்று அழைக்கப்பட்ட அந்த வீர இளைஞன்தான்.

கீழப்பளுவூர் சின்னச்சாமி.

இறக்கும்போது அவனது வயது 27.

சின்னச்சாமி. அவர் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. திருமணமாகி 23 ஆண்டுகள் கழித்து பிறந்த மகன்.

திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டத்தைச் சேர்ந்த கிராமம் கீழப்பளுவூர். ஆறுமுகம் - தங்கத்தம்மாள் சின்னச்சாமியின் பெற்றோர்.

ஐந்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு விவசாயம் பார்த்து வந்த சின்னச்சாமியின் ஒய்வு நேர வேலை சுயமரியாதை இயக்க நூல்களையும், நம்நாடு, திராவிட நாடு, முரசொலி ஏடுகளையும் படிப்பதுதான்.

'திராவிடச் செல்வி'

தன் ஒரே மகளுக்கு சின்னச்சாமி வைத்த பெயர்.

தன் மகளை, மனைவியை, தந்தையின் மரணத்திற்குப் பிறகு தன்னையே நம்பியிருந்த தாயை, வாழவைக்க வேண்டிய கடமையைவிட தாய் மொழிக்காகப் போராடும் வெறிதான் சின்னச்சாமியை ஆட்கொண்டிருந்தது. அந்த நேரத்தில்தான், 'தென் வியட்நாமில் புத்த பிக்குகள் அமைதி வேண்டி தீக்குளித்தார்கள்' என்ற செய்தி பத்திரிகைகளில் வந்தது.

பக்தவச்சலத்தால் கைது செய்யப்பட்டு, விடுதலையானது முதல் யாரிடமும் பேசாமல் இருந்து வந்த சின்னச்சாமி, 24.1.64 வெள்ளிக்கிழமையன்று பள்ளிப் பிள்ளைகளுக்கு இனிப்பு வழங்கி 'தமிழ்வாழப் பாடுபடுங்கள்' என்று உணர்ச்சி பொங்க கூறிக் கொண்டிருந்தார். 'வயலுக்குப் போய் வேலை பார்க்கக் கூடாதா?' என்று கேட்டார்கள் அவரது தாயாரும், மனைவி கமலமும்.

''வேலைக்குத்தான் போகிறேன். திராவிடச் செல்வியை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு திருச்சி வந்து 25.1.64 அதிகாலை 4.30 மணிக்கு ஒளிப்பிழம்பாய் எரிந்துபோனார் சின்னச்சாமி.

இறந்துபோகும் முன் தன் மைத்துனருக்கு எழுதிய கடிதத்தில் சின்னச்சாமியின் மன உறுதியும், இலட்சியமும் தெரிந்தது.

# இறக்குமுன் சின்னச்சாமி எழுதிய கடிதம்

"தமிழ் வாழ வேண்டும் என்று நான் சாகிறேன். கமலத்தைக் காக்கவேண்டும். செல்வி பெரியவளானதும் அம்பிநாதன் துணைவி ஆகட்டும். இதைச் செய்யுங்கள். இதை நான் திருச்சியில் இருந்து எழுதுகிறேன். என்னை மன்னித்து என்னை வாழ்த்தி வழியனுப்பி வையுங்கள். தமிழ் வாழவேண்டும் என்று நான் செய்த காரியம் வெல்லும். வெற்றி"

—சாகப்போகும் சின்னச்சாமி.

## இந்தியன் எக்ஸ்பிரஸ் 29.1.1964

இந்தி ஆதிக்க பயம் காரணமாக திருச்சியில் ஒருவர் தன்னைத்தானே உயிர்த் தியாகம் செய்து கொண்டதை அறிந்து யாரும் அதிர்ச்சி அடையாமல் இருக்க முடியாது. தனது மொழிக் கொள்கை அபாயம் நிரம்பியது என்பதை சின்னச்சாமியின் தியாகம் மத்திய அரசாங்கத்திற்கு உணர்த்த வேண்டும்.

## டெக்கான் ஹெரால்டு 30.1.1964

இந்தி பேசாத பகுதிகளில் இந்தியைத் திணிப்பது பெரும்பான்மையினர் நடத்தும் கொடுங்கோன்மைக்கேற்ற உதாரணமாகும். இந்தப் பின்னணியில் தான் 'இயம்' என்ற கொடுங்கோலனுக்கு எதிராகத் தாய்லாந்தில் தங்களையே சர்வபரித் தியாகம் செய்துகொண்ட புத்த பிட்சுகளைப் பின்பற்றிய சின்னச்சாமியின் உயிர்த் தியாகத்தை நோக்க வேண்டும். அது பற்றி சிந்திக்க வேண்டும்.



திருச்சிக்குச் சென்ற சின்னச்சாமி அங்கே ஒரு புகைப்படமும் எடுத்து அதன் ரசீதையும் தான் உயிர்விடப் போவதாக எழுதிய கடிதத்துடன் இணைத்து தன் நண்பருக்கு அனுப்பியிருந்தார்.

சின்னச்சாமியின் ஒவ்வொரு செயலும் ஒரு போர்வீரனின் அடிகளைப்போல் திட்டமிட்டு வைக்கப்பட்டது. கொள்கை உறுதி ஒவ்வொரு சொல்லிலும் மிளிர்ந்தது. தன் குடும்பத்திற்கென்று சின்னச்சாமி விட்டுப்போன ஒரே சொத்து கொள்கைதான். அதனால்தான் இன்றும்கூட அவர் மனைவி கமலம் தன் கணவரின் வீரமரணத்தைப் பெருமையுடன் நினைத்துப் பார்க்கிறார்.

''இந்தி எதிர்ப்புப் போரில் முதன் முதலாகத் தீக்குளித்தவர் என் கணவர்தான். அந்தப் பெருமை ஒன்றுதான் அவர் எனக்கு விட்டுப்போன சொத்து'' என்று கண்ணீருடன் கூறுகிறார் அவர்.

சின்னச்சாமி இறந்த செய்தி அறிந்த எம்.ஜி.ஆர். 5,000 ரூபாய் கொடுத்தனுப்பி, ''நான் 5,000 ரூபாய் கொடுத்துவிட்டதால் சின்னச்சாமியின் உயிருக்கு இதுதான் மதிப்பு என்று எண்ணிவிடக் கூடாது'' என்று ஒரு கடிதமும் எழுதியுள்ளார். ஆம். மொழிப்போர் வரலாற்றில் விலைமதிக்க முடியாத உயிர் அது என்பதை அப்போது வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ், டெக்கான் ஹெரால்டு பத்திரிகைகளில் வந்த தலையங்கங்கள் உணர்த்துகின்றன.

சின்னச் சாமியின் மகள் திராவிடச் செல்வியின் திருமணத்தை நடத்தி வைத்த கலைஞர் அவர்கள் திருமணத்தின்போது 5,000 ரூபாய் நிதியும் கொடுத்தார். அ.தி.மு.க. 21-ஆம் ஆண்டு தொடக்க விழாவில் ஜெயலலிதா 50 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார். எந்த நிதியும் அன்பளிப்பும் அந்த மாவீரனின் தியாகத்திற்கு ஈடாகாது என்பதற்கு சின்னச்சாமியின் நினைவிடத்தில் எழுப்பப்பட்ட கல்லறையே சாட்சியாக நிற்கிறது.

# கோடம்பாக்கம் சிவலிங்கம்

சின்னச்சாமியைப்போல் ஒரு பத்துத் தமிழனாவது உயிர் நீத்தால்தான் நம் தமிழுக்கு விமோசனம் கிடைக்கும். இந்தி ஆதிக்கம் ஒழியும்'' என்று தன் குடும்பத்தினரிடமும், நண்பர்களிடமும் அடிக்கடி பேசி வந்தவர் கோடம்பாக்கம் சிவலிங்கம். அவர்தான் மொழிப்போரில் இரண்டாவதாகத் தீக்குளித்தவர்.

கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த மொழிப் போராட்டத்தில் ஆர்வத்துடன் பங்கெடுத்து வந்தவர் சிவலிங்கம்.

1965 சனவரி 26 முதல் இந்தியை நாட்டின் ஆட்சி மொழியாக்குவதென்று இந்திய அரசு முடிவெடுத்தது. இந்த அறிவிப்பைக் கேட்டு உணர்ச்சி வேகத்தில் வெடித்துக் கிளம்பியது மாணவர் போராட்டம். தமிழகம் முழுவதும் மாணவர்கள் சனவரி 25 ஆம் நாள் போராட்டத்தில் இறங்கினர். விருதுநகர் சீனிவாசன், காளிமுத்து, நா. காமராசன் இன்னும் சில மாணவர் தலைவர்கள் இப்போராட்டத்தை வடிவமைத்து நடத்தினார்கள். நாடெங்கும் கறுப்புக் கொடிகள் ஏற்றப்பட்டன. அந்த நேரத்தில்தான் 24.1.1965 அன்று இரவு தன் தங்கையிடம் பேசும்போது ''நாளை காலை நீ எங்கும் போகக் கூடாது. வெளியில் ஒரே ரகளையாக இருக்கிறது. நான் அதிகாலையில் சென்று புகைவண்டி நிலையத்தில் கறுப்புக் கொடி ஏற்றிவிட்டு வந்து விடுவேன். நீங்கள் யாரும் என்னைப்பற்றி கவலைப்பட வேண்டாம்'' என்று கூறிய சிவலிங்கம், விடியற்காலையில் வீட்டைவிட்டுச் சென்றார். அதற்குப் பிறகு எரிந்துபோன விறகாக வீடு வந்து சேர்ந்தார்.

உணர்ச்சிமயமான சிவலிங்கத்தின் மரணம் நாட்டை உலுக்கியது. அதை நேரில் பார்த்த விருகம்பாக்கம் அரங்கநாதன் அடுத்த களப்பலியாகத் தன்னை தயாரித்துக் கொண்டார். தமிழ்நாட்டின் தலைநகரில் எழுந்த இந்த தீப்பிழம்பு பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியை அதிரவைத்தது.

''சென்னையில் இரண்டு பேர் தீக்குளித்த செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தேன். இதுபோன்ற நிகழ்ச்சி இதற்கு முன் இந்தியாவில் நடந்தது இல்லை. இதுபோன்ற போராட்டம் துவங்கியதற்கு என்ன காரணம் என்று எனக்கு விளங்கவில்லை. இந்தப் போராட்டத்தைக் கைவிடும்படி தமிழ் மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தி குறித்து உள்ள சிக்கல்களை நாம் ஒருவருடன் ஒருவர் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்'' - என்று பேசினார் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி. (ஜன.29 - தினத்தந்தி 1965)

# விருகம்பாக்கம் அரங்கநாதன்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை விவரம் அறியாத சிறுவர்களின் போராட்டம் என்று கேலி பேசிக் கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர்களை வாய்மூட வைத்தவர் விருகம்பாக்கம் அரங்கநாதன்.

அவர் மாணவரல்ல. மத்திய அரசின் தொலைபேசித் துறையில் பணியாற்றியவர்.

27.12.31 ஆம் நாள் ஒய்யாலி - முனியம்மாள் ஆகியோரின் மூன்றாவது மகனாகப் பிறந்தவர். இளம் வயதிலேயே வீரக்கலைகளில் ஆர்வம் கொண்டவர்.

மான்கொம்பு சுழற்றுதல், சிலம்பாட்டம், சுருள்கத்தி போன்ற வீர விளையாட்டுக்களில் தேர்ச்சிப் பெற்றவர்.

விருகம்பாக்கத்து இளைஞர்களால் 'குரு' என்று அழைக்கப்பட்டவர். விருகம்பாக்கத்திலேயே உடற்பயிற்சி கூடம் அமைத்து அங்குள்ள இளைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து வந்தவர். ஏழை மக்களின் நண்பராகவும், பொது மக்களுக்கு எந்த துயர் வந்தாலும் தட்டிக் கேட்கும் போராளியாகவும் வாழ்ந்தவர். தன்னிடம் பயிற்சி பெற்ற இளைஞர்களை சென்னையின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று போட்டிகளில் பங்கேற்கச் செய்வதும், விருகம்பாக்கத்து இளைஞர்களுக்கு திராவிட இயக்க ஏடுகளை வரவழைத்து படிக்கச் செய்வதும் அவரது கடமைகளாகக் கருதியவர்.

அந்த மாவீரன்தான் 1965 சனவரி 25 ஆம் தேதி எரிந்து கிடந்த கோடம்பாக்கம் சிவலிங்கத்தின் உடலை நேராகப் பார்த்துவிட்டு வந்து, தீவிரமான சிந்தனையிலேயே இரண்டு நாட்களை கழித்துவிட்டு, 27.1.65 புதன்கிழமை இரவு 2 மணிக்கு விருகம்பாக்கம் நேஷனல் தியேட்டர் அருகில் ஓர் மாமரத்தின் அடியில் திட்டமிட்டபடி தனக்கு தீயிட்டுக் கொண்டான். கருகிப்பேன அரங்கநாதனின் உடலுக்குச் சற்றுத்தள்ளி அவர் விட்டுச் சென்ற வரலாறு கிடந்தது. ஒரு அட்டையில் சுற்றப்பட்டிருந்த காகிதங்களைப் பார்த்தபோதுதான் அவை இந்தித் திணிப்பைக் கண்டித்து மத்திய, மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள். அந்தக் கடிதங்களை பதிவு அஞ்சலில் அனுப்பியதற்கான ரசீதுகள் என்று தெரிந்தது.

வீரம் மிக்க இளைஞனை பறிகொடுத்த சோகத்தில் விருகம்பாக்கம் ஆழ்ந்தது. அமுதவாணன் (வயது 7), அன்பழகன் (வயது 3), ரவிச்சந்திரன் (6 மாதக் கைக்குழந்தை) என்று மூன்று இளந்தளிர்களைச் சுமக்கவேண்டிய நிலைக்கு ஆளானார் அரங்கநாதன் மனைவி மல்லிகா.

இறக்கும்போதும் தன் குடும்பத்தை நினைக்காமல் 'தமிழ் வாழ்க, இந்தி ஒழிக - தமிழுக்காக உயிரைக் கொடுக்கிறேன்' என்று அண்ணா, நாவலர், மதியழகன் ஆகியோருக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டு இறந்துபோன அரங்கநாதனின் மறைவுக்கு மறைந்த ஆதித்தனார், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். மற்றும் பல தலைவர்கள் இல்லம் வந்து மரியாதை செலுத்தினர்.

அரங்கநாதன் பெயரால் அமைக்கப்பட்ட சுரங்கப்பாதை சென்னையில் இருக்கிறது. தனக்குள் ஒரு நெருப்பைச் சுமந்திருப்பதை அறியாமல்.

## சிவகங்கை இராசேந்திரன்

சிவகங்கையில் பிறந்தாலும் சிதம்பரத்தில் குண்டடிபட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு அழியாப் புகழைச் சேர்த்தவன்தான் இராசேந்திரன்.

அரசியல் தலைவர்கள் அமைதியாக இருந்தபோது போராட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்ட மாணவர்கள் நாடெங்கும் நடத்திய போராட்டத்தின் ஒரு பகுதியாய் 27.1.1965 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள்.

அந்த ஊர்வலத்தில் ஆவேசமாக முழக்கமிட்டுச் சென்ற இராசேந்திரனுக்கு வயது 18. அவனது தந்தை காரைக்குடிக்கு அருகில் உள்ள கல்லல் என்ற ஊரில் போலீஸ்காரராகவும், ராசேந்திரனது அண்ணன் சுங்க இலாகா அதிகாரியாகவும் பணியாற்றிக் கொண்டிருநதனர். தங்கள் குடும்பத்தில் இன்னொரு அதிகாரி வரப்போகிறார் என்ற கனவுகளோடு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்சி., வகுப்பில் இராசேந்திரனை சேர்த்தார்கள்.

அந்த இராசேந்திரன்தான் ஊர்வலத்தில் முன்னணியில் முழக்கமிட்டுச் சென்றான். காவல் துறையின் வெறியாட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டது. துப்பாக்கி சூடு நடந்தது. குண்டடிபட்டு வீழ்ந்த இராசேந்திரனின் மரணம் மாணவர்களின் உள்ளத்தில் அனல் மூட்டியது.

இராசேந்திரனின் உடல் சிதம்பரத்தை அடுத்த பரங்கிப்பேட்டையில் அடக்கம் செய்யப்பட்டது. 1947 ஜூலை மாதம் 16 ஆம் நாள் முத்துக்குமார் பிள்ளை, வள்ளிமயில் அம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்த இராசேந்திரன் மாணவர் சமூகத்தின் மதிப்பைப் பெற்ற தியாகியானான்.

28.1.1965 அன்று தஞ்சையில் பூண்டி புஸ்பம் கல்லூரி, தஞ்சை

சரபோஜி கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கரந்தை புலவர் கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் அமைதி ஊர்வலம் நடத்தினார்கள். புதுக்கோட்டையில் கல்லூரி மாணவர்களுடன் பள்ளி மாணவர்களும் சேர்ந்து அனுதாப ஊர்வலம் நடத்தினார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் இராசேந்திரனுக்கு சிலை எழுப்பினார்கள். அந்தச் சிலை இப்போது சிதைந்து கொண்டிருக்கிறது. அந்த மாணவனின் புகழ் மட்டும் சிதைக்க முடியாததாய் இருக்கிறது.

# பீளமேடு தண்டபாணி

கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் அருகில் உள்ள குளத்துப்பாளையம் என்ற ஊரில் மாட்டுச் செக்கு வைத்து பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த மாரியப்பன் செட்டியார் - மாரியம்மாள் தம்பதிக்கு தங்கள் மூன்று பெண்கள், இரண்டு பையன்களில் ஒருவரையேனும் படிக்க வைக்க வேண்டும் என்று ஆசை. மூத்த மகனுக்கு பள்ளிக் கல்வியை மட்டும்தான் அவர்களால் கொடுக்க முடிந்தது. எனவே, எப்படியாவது தன் இரண்டாவது மகன் தண்டபாணியை படிக்க வைத்து குடும்பத்தின் வறுமை நிலையை மாற்ற வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

1944-ஆம் ஆண்டு பிறந்த தண்டபாணிக்கு இயல்பாகவே கல்வியில் இருந்த ஆர்வத்தினால் கோவை தேவரங்கம்பேட்டையிலும், உக்கடத்திலும் ஆரம்பப் பள்ளியும் கோவை கல்லூரியிலேயே புதுமுக வகுப்பும் (பி.யூ.சி.) தேர்ச்சிப் பெற்று கோவை பீளமேட்டில் உள்ள பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரியில் சேர்ந்தார்.

1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உச்சகட்டமாய், மாணவ, மாணவிகள் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டதும் வரிசையாக இளைஞர்கள் தீக்குளித்தும், நஞ்சுண்டும் இறந்த செய்திகளும், ஆயிரக்கணக்கானோர் தடியடி துப்பாக்கி சூட்டிற்கும் ஆளான கொடுமைகளையும் படித்தும் கேட்டும் அறிந்த தண்டபாணி, தன் குடும்பச் சூழ்நிலை, தன் கல்வி, எதிர்காலம் எல்லாவற்றையும் மறந்தார்.

1965 பிப்ரவரி மாதம், உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என்று எழுதி வைத்துவிட்டு நஞ்சுண்டு தன் அறையிலேயே மயங்கி கிடந்தார். மாணவர்கள் அவரை கோவை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள்.



நிற்பவர்கள்: (இடமிருந்து வலம்) சின்னச்சாமியின் மனைவி கமலம், சண்முகத்தின் தாயார் சௌந்தரம், அரங்கநாதனின் மனைவி மல்லிகா, சத்தியமங்கலம் முத்துவின் தம்பி சின்னச்சாமி, இராசேந்திரனின் தந்தை முத்துக்குமார், கீரனூர் முத்துவின் அண்ணன் வேலு.



அமர்ந்திருப்பவர்கள்: (இடமிருந்து வலம்) சின்னச்சாமியின் மருமகன் அம்பிநாதன், சத்தியமங்கலம் முத்துவின் அண்ணன் மாரியப்பன், ஆசிரியர் வீரப்பனின் அண்ணன் நல்ல கருப்பன், வழக்கறிஞர் செல்வம், சண்முகத்தின் அண்ணன் மாணிக்கம், அரங்கநாதனின் மகன் அமுதவாணன், கீரனூர் முத்துவின் தந்தை நடேசன்.

தண்டபாணியை மருத்துவர்களால் காப்பாற்ற முடியவில்லை. தண்டபாணியின் இறுதி ஊர்வலத்தில் ஏராளமான மாணவ - மாணவியரும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

பீளமேடு மாணவர்கள் தண்டபாணியின் குடும்பத்திற்காகத் திரட்டிய நிதி 10,000 ரூபாயை பெற்றுக் கொள்ளும்போது தண்டபாணியின் தந்தை கதறி அழுதார்.

அந்தக் குடும்பத்தின் கண்ணீரை காலம் ஆற்றியிருக்கலாம். மொழிப் போர் வரலாற்றில் எழுதப்பட்ட தண்டபாணியின் பெயர் இன்னும் ஈரம் காயாமல் இருக்கிறது.

# சத்தியமங்கலம் முத்து

செய்தித் தாள்களில் அன்றாடம் தலைப்புச் செய்திகளாக வந்த தியாகிகளின் பட்டியல் லாரி ஒர்க் ஷாப்பில் வேலை செய்து கொண்டிருந்த முத்து என்ற இளைஞனை பாதிப்புக்குள்ளாக்கியது. 5 ஆம் வகுப்பு வரை படித்த முத்துவுக்கு சொந்த ஊர் சத்தியமங்கலம் வட்டத்திலுள்ள குமாரபாளையம். 1943 ஆம் ஆண்டு பிறந்த முத்துவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீதும் தமிழின் மீதும் தாளமுடியாத ஆர்வம்.

1965 சனவரியில் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட முத்து தானும் தமிழுக்காக உயிர்விட முடிவு செய்தான். தான் இறந்து போனால், இந்தி ஆதிக்கம் மறைந்து போகும் என்று நம்பி, 1965 பிப்ரவரி மாதம் ஒரு வியாழக்கிழமை சத்தியமங்கலத்தில் மாலை 7 மணி அளவில் தன் உடலின்மீது பெட்ரோலை ஊற்றிக் கொண்டு 'தமிழ் வாழ்க - இந்தி ஒழிக' என்று முழங்கியவாறே எரிந்து போனான்.

சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, தீவிர சிகிச்சை அளித்தும் உடல் முழுவதும் வெந்து விட்டதால், முத்துவை காப்பாற்ற முடியவில்லை. அவரது உடல் சொந்த ஊரான குமாரபாளையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தமிழுணர்வு கொண்ட மக்கள் புடைசூழ குமாரபாளையம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

1966 ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற திருச்சி - தஞ்சை மாவட்ட தி.மு.க. மாநாட்டில் முத்துவின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதே ஆண்டில் மதுரையில் நடந்த தி.மு.க. மாநாட்டு அரங்கிற்கு 'சத்தியமங்கலம் முத்து'வின் பெயர் சூட்டப்பட்டது.

சத்தியமங்கலம், குமாரபாளையம் ஆகிய இரண்டு ஊர்களிலும் 1966-ல் தியாகி முத்து மன்றம் அமைக்கப்பட்டு இயங்கி வந்தது. தற்போது இந்த மன்றங்கள் செயல்படவில்லை.

தமிழ்நாட்டின் வரலாற்றில் தன் பெயரையும் எழுதிவிட்ட நிறைவுடன் எரிந்துபோன அந்த தியாகச் சுடருக்கு எந்த அடைமொழியும் புகழ் சேர்த்துவிடாது.

# அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன்

மாணவர்கள் போராடினால் வேலையில்லாதவர்கள் என்று திசை திருப்பலாம். மற்ற இளைஞர்களின் போட்டத்தைக் 'காலித்தனம்' என்று கொச்சைப்படுத்தி விடலாம். அரசாங்கங்கள் தேர்ந்தெடுத்து வைத்திருக்கும் சான்றிதழ்கள் இவை. மொழிப் போரும் அத்தகைய விமர்சனங்களைச் சந்தித்ததுதான். என்றாலும், ஒரு பள்ளித் தலைமை ஆசிரியர் தீக்குளிப்பது என்பது திகைக்க வைக்கக் கூடியது அன்றோ? அப்படித் தீகுளித்தவர்தான் ஆசிரியர் வீரப்பன்.

ஆசிரியர் வீரப்பன் விடாமுயற்சியின் சின்னம். 1938-ல் பிறந்த வீரப்பன், 1952-ல் ஈ.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றார். 1955-ல் தன் அண்ணன் நல்ல கருப்பன் முயற்சியால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து ஹையர் கிரேடு ஆசிரியராக தேர்ச்சி பெற்றார். வேலை பார்த்துக் கொண்டே படித்து செகண்டரி கிரேடு ஆசிரியராகத் தேர்ச்சி பெற்றார்.

62 ஆம் ஆண்டு முதல் பல்வேறு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்ற பின் க. அய்யம்பாளையத்தில் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். பள்ளி நேரம் போக தன் நாள் முழுவதையும் தன் தமிழ் மொழிப் புலமையை வளர்த்துக் கொள்ளவும், கரூர், திருச்சி, குளித்தலை போன்ற பகுதிகளில் நடைபெறும் தி.மு.க. கூட்டங்களுக்குச் செல்லவும் செலவிட்டார். இளைஞர்களை ஊக்குவித்து 'இளைஞர் மன்றம்' தொடங்கச் செய்து திராவிட இயக்க ஏடுகளை படிக்கச் செய்வதும், தன் மாணவர்களுக்குத் தமிழின் பெருமையைப் பற்றிப் பாடங்கள் நடத்துவதும், பொங்கல் நாளன்று தமிழர் திருநாள் கூட்டங்கள் ஏற்பாடு செய்து உரையாற்றுவதும் அவரது தலையாய பணியாகச் செய்து வந்தார்.

1965-ல் கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து தன் பள்ளி மாணவர்களையும், இளைஞர்களையும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தச் செய்த அதிசயமான தலைமையாசிரியர் அவர்.

பஞ்சப்படி, அகவிலைப்படி பற்றி மட்டுமே கவலைப்படும் ஆசிரியர்களை நாம் அறிவோம். தன் வாழ்வையே தாய் மொழிக்காக அர்ப்பணித்த ஆசிரியர் வீரப்பனை நாடு அறியாது. அப்போதுதான் பல்வேறு வகையில் இந்தி எதிர்ப்புப் போரில் உயிர் நீத்த தியாகிகளின் செய்திகள் பத்திரிகைகளில் வந்தவண்ணம் இருந்தன. இந்தப் போர்முறை ஆசிரியர் வீரப்பனை வீறு கொள்ளச் செய்தது.

இந்தியைத் திணிக்க விரும்பும் அரசிடம் வேலை செய்யக் கூடாது என்று முடிவெடுத்த வீரப்பன் முதலமைச்சர் பக்தவச்சலம், பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி ஆகியோருக்கு கண்டனக் கடிதங்களும், அண்ணா அவர்களுக்கும் கலைஞர் அவர்களுக்கும் தமிழைக் காக்க முயற்சி செய்யுங்கள் என்று வேண்டுகோள் கடிதங்களும் எழுதினர்.

10.2.65 அன்று கடிதங்களை அஞ்சலில் அனுப்பிவிட்டு அதை தன் நாட்குறிப்பிலும் எழுதினார்.

11.2.65 அன்று ஏராளமான தூக்க மாத்திரைகளை சாப்பிட்டுவிட்டு தன் உடலில் உடுத்தியிருந்த உடையோடு மேலும் பல வேட்டிகளை உடம்பில் சுற்றி, தன் உடலிலும், உடைகளிலும் மண்ணெண்ணை ஊற்றி ஊறவைத்துக் கொண்டு தீயிட்டுக் கொண்டார்.

பற்றி எரிந்த தீயைக்கண்டு அணைக்க ஓடிவந்த மக்களைப் பார்த்து 'என்னைக் காப்பாற்ற முயற்சி செய்யாதீர்கள். நான் அதிகமாக தூக்க மாத்திரைகள் சாப்பிட்டுள்ளேன். தீயிலிருந்து என்னைக் காப்பாற்றினாலும் சாவிலிருந்து காப்பாற்ற முடியாது. தமிழைக் காப்பாற்ற முயலுங்கள். என்னுடைய நாட்குறிப்பில் எல்லா விவரமும் குறித்துள்ளேன்'' என்று சத்தம் போட்டார். மக்களின் முயற்சி பலனின்றி முடிய ஆசிரியர் வீரப்பன் இறந்துபோனார். திருமணம்கூட செய்துகொள்ளாத வீரப்பன் இறக்கும்போது அவருக்கு வயது 27.

திருச்சி மாவட்டம் குளித்தலை அருகே உள்ள ப. உடையாம்பட்டி என்ற ஊரில் பிறந்த நல்ல வீரப்பன் மொழிப் போர் தியாகியாகி அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் என்றே அழைக்கப்படுகிறார்.

25.1.80-ல் மொழிப் போர் தியாகிகள் நாளில் ஆசிரியர் வீரப்பனுக்கும், விராலிமலை சண்முகத்திற்கும் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது. முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன்

அந்த நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்தார்.

ஆசிரியர் வீரப்பனுக்கு எழுப்பப்பட்ட நினைவுச் சின்னம் தமிழர்களின் தன்மானச் சின்னமல்லவா?

## கீரனூர் முத்து

தமிழ் உணர்வு சிலருக்கு மட்டும்தான் உயிரோடும், உணர்வோடும் கலந்து கிடக்கிறது.

1957-ல் ஏழாம் வகுப்பு படிக்கும் 14 வயது மாணவன் தன் பள்ளித் தோழர்களுடன் மொழி உணர்வு பற்றி கோபம் கொப்பளிக்கப் பேசினான் என்பது பலருக்கு வியப்பாக இருந்திருக்கும். அதுமட்டுமல்ல - அந்த மாணவன் தன் ஊரிலிருந்து பக்கத்து ஊருக்குச் செல்லும் வழியில் உள்ள கோயில் மண்டபச் சுவர்கள், சத்திரங்களின் சுவர்கள் என்று எல்லா இடங்களிலும் இரும்புக் கம்பியால் சுரண்டி, 'இந்தி ஒழிக', 'தமிழ் வாழ்க' என்று தன் உணர்ச்சியை பதிவு செய்து வைத்தான். அவன்தான் புதுக்கோட்டை மாவட்டம் (அப்போது தஞ்சை மாவட்டம்) அறந்தாங்கி வட்டம், பாலைவனம் ஜமீனைச் சேர்நத சின்னச் சுனையக்காடு என்ற கிராமத்தில் 1943 ஆம் ஆண்டு பிறந்த கீரனூர் முத்து.

குடும்பத்தின் ஏழ்மை காரணமாக படிக்க முடியாத நிலையிலும் முத்துவின் தமிழார்வம் தணியவில்லை. தந்தைக்கு உதவியாக விவசாய வேலை பார்த்தபோதும் தன் உள்ளத்தில் தமிழுணர்வைத்தான் அவன் பயிரிட்டுக் கொண்டிருந்தான். 1964 ஆம் ஆண்டு புதுக்கோட்டை, குளத்தூர் தாலுகாவில் உள்ள கீரனூரில் உணவு விடுதிப் பணியாளனாகச் சேர்ந்த போதும் முத்துவின் தமிழ்ப் பணி நின்றபாடில்லை.

மொழிப்போர் தியாகிகள் மரணச் செய்திகளை பத்திரிகைகளில் படிக்கப் படிக்க பீரிட்டு வந்த கோபமும், வேகமும் கீரனூர் முத்துவை அலைக் கழித்தது. இத்துணை தியாகத்தையும் துச்சமாக மதித்த காங்கிரஸ் தலைவர்களும், அமைச்சர்களும் 'இந்தியைத் திணித்தே தீருவோம்' என்று கொக்கரித்தனர். இதையெல்லாம் பத்திரிகையில் படித்த முத்து அன்றைய முதல்வர் பக்தவச்சலத்திற்கு இந்தித் திணிப்பை நிறுத்துங்கள் என்றும் அண்ணா அவர்களுக்கு தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுங்கள் என்றும் கடிதங்கள் எழுதி அந்தக் கடிதங்களை தன் மடியில் சுமந்தபடியே நஞ்சுண்டு இறந்து கிடந்தான்.

எந்தவிதமான செல்வாக்கும் இல்லாத ஏழைக் குடும்பத்தில் பிறந்த முத்து தன் உயிரை தாய்மொழிக்குக் கொடுத்து வரலாறானான்.

1967-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் முத்து இறந்துகிடந்த இடத்தில் சீரணி அரங்கம் ஒன்று எழுப்பபப்பட்டு அதற்கு தியாகி முத்து சீரணி அரங்கு என்று பெயர் சூட்டப்பட்டது.

# விராலிமலை சண்முகம்

இந்தி எதிர்ப்புப் போராட்டம் மேலும் மேலும் வலுப்பெற்றுக் கொண்டிருக்க, போலீசாரின் காட்டுமிராண்டித் தனமான தாக்குதலும் அரசின் ஆணவப் போக்கும் எல்லை மீறிப் போய்க் கொண்டிருந்த நேரம். இறந்துபோன இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போன செய்தி அண்ணாவை கவலை கொள்ளச் செய்தது. ''பாறைபோல் இருந்தார் பக்தவச்சலம்'' என்று மத்திய அரசு பாராட்டுப் பட்டயம் வழங்கியது. அந்த நேரத்தில்,

> *''இரண்டு இரயில் பெட்டிகள் சாம்பலனால் திரும்பப் பெறலாம். இரண்டு மாணவர்களின் உயிர் போனால் திரும்பப் பெற முடியுமா? மாணவர்களே போராட்டத்தைக் கைவிடுங்கள்''*

என்ற அண்ணாவின் வேண்டுகோள் மாணவர்களைத் திகைக்க வைத்தது. என்ன செய்வதென்று புரியாமல் இளைஞர்களும், மாணவர்களும் அதிர்ந்தனர்.

அந்தச் சூழ்நிலையில் 1965 பிப்ரவரி 25

''வீட்டுக்குப் போய் இந்தக் கடிதத்தைப் படி'' என்று தன் நண்பன் மூர்த்தியிடம் தந்த கடிதத்தில்,

''நீ இதைப் படிக்கும்போது நான் இறந்து போயிருப்பேன்'' என்று எழுதி வைத்துவிட்டு விராலிமலையில் சண்முகம் என்ற இளைஞன் நஞ்சுண்டு மாண்டு போனான் என்ற செய்தி தமிழகத்தை உலுக்கியது.

விராலிமலை சண்முகம் - எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத் துணைச் செயலாளர், மளிகைக் கடையில் வேலை செய்து கொண்டு பொதுக் கூட்டங்களில் மொழிப் போர் பற்றி பேசிக் கொண்டு இருந்தவர். இந்திக்குக் கொள்ளி வைக்கிறேன் என்று சொல்லி தலையை மொட்டை அடித்தக் கொண்டு கொடும்பாவிக்குக் கொள்ளி வைத்தவர். கோபம் அதிகமானால், இந்தி புத்தகங்களுக்கும் தீ வைப்பார்.

மனித உணர்ச்சியும் மான உணர்ச்சியும் போய் இந்த நாட்டில் எவனும் அரசியல் மேதையாய் உலவ வேண்டிய அவசியமில்லை. இந்தி ஏகாதிபத்தியத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இதிலே நமக்கு உயிர் பெரிதல்ல! இந்தக் காலத்திலே வாழ்ந்திருந்த தமிழர்கள் கோட்டைவிட்டு விட்டார்கள் என்று பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் வருகின்ற மக்கள் நம்மீது பழி சுமத்தக்கூடிய நிலையிலே நாம் இந்த நேரத்தில் தவறு செய்துவிடக் கூடாது.

—ஈ.வெ.கி. சம்பத்
13.10.1957-இல் உரை

நீங்களெல்லாம் கோழைகளாக ஆகிவிட்டீர்கள் என்று எங்களைச் சொல்லிவிட்டு சண்முகம் இறந்து போனான். நான் நிச்சயமாகச் சொல்லிக் கொள்கிறேன். தமிழுக்காக ஒரு போராட்டம் வந்து நீங்கள் செத்துப் பாருங்கள் என்று சொன்னால் சட்டமன்றத்திற்கு உள்ளேயே நான் தீக்குளிக்கத் தயார்.

—8.3.1965 அன்று சட்டமன்றத்தில் அன்பில் தர்மலிங்கம்

சிந்தனைத் தெளிவுமிக்க சண்முகம் இறப்பதற்கு அய்ந்து நாட்களுக்கு முன் தன் உறவினர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், ''தமிழர் விடுதலைப் போராட்டத்தில் நீ கலந்து கொண்டாயா? நீ கலந்து கொண்டிருந்தால் நான் மனதார வாழ்த்துவேன். நிராகரித்து ஒதுங்கி இருந்தால் மிகவும் வேதனை அடைவேன். இந்தி மொழியானாலும் சரி, வேறு எந்த மொழியானாலும் மக்களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டியதே. ஆனால், நம் மொழியை அழித்து அது ஆட்சி செய்ய வந்தால் யாரும் ஒப்ப முடியாது'' என்று குறிப்பிட்டுள்ளார். அவரது மொழிப் பற்று எத்தகைய ஆழ்ந்த கருத்துடையது என்பதை இதன்மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.

போராட்டத்தை கைவிடச் சொன்ன அண்ணாவின் குரல் சண்முகத்தைக் காயப்படுத்தி விட்டது.

தி.மு.க. தலைவர் அவர்களே, தமிழைக் காக்கத் தவறிவிட்டீர்கள். பக்தவச்சலம் ஆட்சிக்குப் பயந்து விட்டீர்கள். இன்னும் பயம் வேண்டுமா? அய்யா, துரோகி பக்தவச்சலத்தின் ஆட்சியில் தமிழ் தழைக்க வழியின்றி போய்விட்டது. தி.மு.க.வின் தொண்டர்களையும், தமிழ்த்தாயின் புதல்வர்களையும் பாதுகாப்பு சட்டம் என்ற போர்வையால் மூடி மறைத்து விட்டார்கள். தமிழ்த்தாயின் பாதம் இரத்தத்தால் கறை படிந்துள்ளது. அண்ணா, நீங்கள் ஆணையிட்டால் தமிழகம் தங்கள் ஆணையைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறது. சும்மா இருந்து விடாதீர்கள்''

என்று அண்ணாவுக்கு கடிதம் எழுதிவிட்டுச் செத்த வரலாற்று நாயகன்தான் விராலிமலை சண்முகம்.

1943 ஆகஸ்ட் 11 ஆம் நாள் திருச்சி மாவட்டம் புதுக்கோட்டையைச் சேர்ந்த நார்த்தாமலையில் திரு.மு. இராமையா சவுந்தரம் அம்மாளின் இரண்டாவது மகனாகப் பிறந்து விராலிமலையில் குடும்பத்தை அமைத்து ஏழ்மை நிலையிலும் கொள்கை உறுதி குலையாது வாழ்ந்த விராலிமலை சண்முகத்தின் இறுதி ஊர்வலம் திருச்சியில் நடந்தது. விராலிமலை மக்கள் திரண்டு திருச்சிக்குச் சென்று இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

8.4.66 அன்று விராலிமலையில் நிறுவப்பட்ட சண்முகம் படிப்பகத்தை அறிஞர் அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**19.8.1979-ல்** புதுக்கோட்டையில் நடந்த தி.மு.க. பொதுக் கூட்டத்தில் தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் சண்முகம்

குடும்பத்துக்கு 2 ஆயிரம் ரூபாய் வழங்கினார்.

25.1.1980-ல் மணப்பாறையில் மொழிப்போர் தியாகிகள் நினைவு நாளின்போது சண்முகம் நினைவுச் சின்னத்தை தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.

7.8.81 அன்று சண்முகத்தின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட கல்லறையை முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் திறந்து வைத்தார்.

இப்போதும் விராலிமலை சண்முகத்தின் அண்ணன் மாணிக்கம் ''1965 மொழிப் போர் தியாகிகள் சங்கம்'' அமைத்து செயல்பட்டு வருகிறார்.

# மாயவரம் சாரங்கபாணி

1965 சனவரி, பிப்ரவரி மாதங்களில் தமிழகத்தை உலுக்கியெடுத்த மாணவர் போராட்டத்தில் மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரி என்று அழைக்கப்படும் அன்னதானபுரம் வகையறா கல்லூரியில் பி.காம் முதலாண்டு படித்து வந்த சாரங்கபாணியும் தீவிரமாக செயல்படத் தொடங்கினார்.

மதுரையில் அமைதியாக ஊர்வலம் சென்ற மாணவர்கள் மீது காங்கிரசு குண்டர்கள் தாக்குதல் நடத்தினார்கள். இதையறிந்த பள்ளி கல்லூரி மாணவர்கள் நாடு தழுவிய போராட்டங்களை நடத்தினார்கள். வகுப்புகளைப் புறக்கணித்தார்கள்.

இந்த நேரத்தில்தான் மயிலாடுதுறையிலும் போராட்டத்தை தீவிரப்படுத்திக் கொண்டிருந்த மாணவன் சாரங்கபாணி, காங்கிரஸ் தலைவர்களின் ஆணவத்தையும் தமிழ்நாட்டின் தெருக்களில் இராணுவம் ஆயுதங்களைத் தாங்கி நடமாடுவதையும் கண்டித்து 15.3.65-ல் கல்லூரி வளாகத்திலேயே தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். உணர்ச்சிமயமான சூழலில் தாயற்ற அந்த இளைஞனின் உடல் சொந்த ஊரான தஞ்சை மாவட்டம் மருதவஞ்சேரியில் அடக்கம் செய்யப்பட்டது.

★ ★ ★

இந்திப் எதிர்ப்புப் போரில் தங்களையே அழித்துக் கொண்ட இந்த மாவீரர்களின் வாழ்க்கை வருங்காலத் தமிழ்நாட்டின் வரலாறல்லவா?

இந்தப் போராளிகளையும் கொச்சைப் படுத்தியவர்கள் தமிழ்நாட்டில் இருக்கத்தான் செய்தார்கள்.

படிக்காதவர்கள் - மனநிலை சரியில்லாதவர்கள், உணர்ச்சி வசப்பட்டவர்கள் என்றெல்லாம் இந்தத் தியாகிகளைப் பற்றிச் சொன்னவர்கள் தங்கள் உணர்வுகளை வார்த்தைகளாய்ச் செதுக்கி வைத்திருந்த அந்த தியாகிகளின் மரண சாசனங்களை படித்தறியா பாமரர்கள் என்றுதானே நமக்கு நினைக்கத் தோன்றுகிறது.

மொழி ஒரு சமூகத்தின் மேல் கட்டுமானத்தில் தான் இடம் பெறுகிறது என்று கூறும் இடதுசாரி சிந்தனையாளர்கள் உண்டு. ஆனால், பொறியியல் கல்லூரியில் படித்த பீளமேடு தண்டபாணி முதல் ஆறாவது வகுப்பைக்கூட எட்டமுடியாத விராலிமலை சண்முகம் வரை தெரிந்து வைத்திருந்தார்கள் - மொழி என்பது தேசிய இனத்தின் முகமும், முகவரியும் என்று. ஆலமரத்தின் விழுதுகள் கீழே இறங்கி பூமியைத் தொட்டபின், அடிமரம் வலுவிழந்து போனாலும் விழுதுகள் அதைக் காப்பாற்றும் அடித்தளமாகும். அப்படித்தான் மேல்கட்டுமானம் என்று கருதப்படும் மொழிகூட காலப்போக்கில் அடித்தளமாய் ஆகிவிடக் கூடும். அயர்லாந்துப் போராட்டமும், தமிழ்நாட்டின் இந்தி எதிர்ப்புப் போரும் இந்த உண்மையைத்தான் உணர்த்துகின்றன.

1938 - தொடங்கி பல்வேறு காலகட்டங்களிலும் மொழிப் போராட்டம் நடந்திருந்தாலும் - 64-65 போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பல உயிர்த் தியாகங்கள் நடந்ததும் - தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடியாத காங்கிரசு அரசு விரட்டப்பட்ட மாறறமும் 65-க்குப் பின்னால்தான். அதைத் தொடர்ந்து திராவிட இயக்க அரசுகள் உருவாக அடித்தளமாக அமைந்ததும் இவர்களின் ஈடு சொல்ல முடியாத தியாகம்தான்.

இவர்களின் முன்னோடிகளாக 1939-இல் சிறைச்சாலையில்

இறந்து போன தாளமுத்து, நடராசன் ஆகியோரின் உடல் புதைக்கப்பட்ட இடுகாட்டில் பேசும்போது ''இரண்டு மணிகளை இழந்தோம். தமிழர் ஆட்சி ஏற்படும் போது இவ்விரு வீரர்களின் தியாகத்தை அடிப்படையாகக் கொண்டே எழுதப்படும். வருங்காலத்தில் விடுதலை பெற்ற தமிழகத்தில் தலைவர் பெரியாரை நடுவில் வைத்து - இறந்த இரு மணிகளையும் பக்கத்தில் வைத்து உருவச் சிலை எழுப்ப வேண்டும்'' என்று அண்ணா சொன்னார்.

எழுப்பினோமா?

தங்கள் கைகளில் ஆட்சி அதிகாரம் கிடைத்த இரண்டாண்டு காலத்துக்குள் உத்தரப் பிரதேசத்தில் ''ஆரியர்கள் இந்தியாவின் பூர்வீகக் குடிமக்கள்'' என்று வரலாற்றையே மாற்றி எழுதினார்களே பாரதிய ஜனதா கட்சியினர்.

25 ஆண்டுகால ஆட்சியில் திராவிட இயக்க அரசுகள் என்ன செய்தன?

இந்த மொழிப்போர் வீரர்களின் வரலாற்றைக்கூட நம் பாடப் புத்தகங்களில் பதிவு செய்யவில்லையே?

இந்தியை எதிர்த்து உயிர்த் தியாகம் செய்த வீரர்களின் மண்ணில் தெருவுக்குத் தெரு - எம் தமிழ்க் குழந்தைகளின் மூளையை நசுக்கும் ஆங்கில நர்சரிப் பள்ளிகள் ஆட்டம் போடுகின்றனவே?

நாம் என்ன செய்தோம்?

அந்த வீரமறவர்களின் போராட்டம் முடிந்து போய்விட்டதா? இல்லையே....

நாம் இன்னமும் கூர்மைப்பட வேண்டும் என்பதை உணர்த்தத் தானே தினமும் தொலைக்காட்சியில் இந்தித் திரைப்படம் போட டெல்லி தயாராகிக் கொண்டிருக்கிறது.

சித்ரஹார், சித்ரகீத், சித்ரமாலா இவையெல்லாம் என்ன?

நம் அனுமதி இல்லாமலேயே இந்தி நம் வீட்டுக்குள் நுழையப் போகிறதே?

இதை எதிர்த்துத்தானே செத்தார்கள்?

இதைக் கண்டித்துத்தானே தீக்குளித்தார்கள்?

இதை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் போனதால் தானே நஞ்சுண்டு மடிந்தார்கள்?

மடிந்துபோன அந்த வீரர்களின் குடும்பங்களுக்கு நாம் மரியாதை செய்திருக்கிறோம் - தலைவர்கள் பண உதவி செய்திருக்கிறார்கள்.

தங்கள் வாழ்நாளின் இறுதிவரை தமிழர்கள் அந்தக் குடும்பங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

''தமிழ் வாழ்க என்று முழக்கமிட்டுத் தங்கள் தேக்கு மரத்தேகங்களைத் தீக்கிரையாக்கிக் கொண்டதும் - குண்டடிபட்டு மாண்டதும் எந்த ஒரு கட்சிக்காகவும் அல்ல - தமிழுக்காக - தமிழ் நாட்டுக்காக - மொழி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக'' என்று ஒரு வீரவணக்க நாளில் காளிமுத்து பேசினார்.

அதுதானே உண்மை.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் தன் மொழிக்காக - தன் இனத்துக்காக தங்கள் உயிரையே உருக்கித் தந்தார்களே... அந்த ''தீயாக தீபங்களுக்கு'' நாம் என்ன செய்தோம்?

தாளமுத்து, நடராசன் தொடங்கி, பின்னாளில் தீக்குளித்து, நஞ்சுண்டு மாண்ட அத்தனை வீரர்களுக்கும் ''நினைவுத் தூண்'' அமைத்து அவர்களின் தியாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு சொல்ல வேண்டியதும் - அவர்கள் ஏற்றிய மொழி உணர்வுத் தீயை ஏந்திச் செல்ல வேண்டியதும் நம்முடைய கடமையல்லவா?

★ ★ ★

# வரலாற்றில் பதிந்த மரணம்

1. தாளமுத்து
2. நடராசன்

1938 சென்னை சிறைச்சாலையில் மரணம் அடைந்தவர்கள்.

3. கீழப்பளுவூர் சின்னச்சாமி - 25.1.64 திருச்சியில் தீக்குளித்தார்.

4. கோடம்பாக்கம் சிவலிங்கம் - 25.1.65 சென்னையில் தீக்குளித்தார்.

5. விருகம்பாக்கம் அரங்கநாதன் - 27.1.65 சென்னை அருகில் விருகம்பாக்கத்தில் தீக்குளித்தார்.

6. சிவகங்கை இராசேந்திரன் - 27.1.65 சிதம்பரம் அண்ணாமலை நகரில் போலீசால் சுடப்பட்டார்.

படியுங்கள்

## தமிழர்களின் போர்வாள்

# இனி

சமூக அரசியல் மாத இதழ்

விலை ரூ.3/-

ஆண்டு சந்தா ரூ.40/-

வாழ்நாள் சந்தா ரூ.500/-

தொடர்புகளுக்கு:

இனி,

7, அய்யம்பெருமாள் தெரு,

இராயப்பேட்டை,

சென்னை - 600 014.